---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்கள் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 இன் 110 ஆம் பந்தியின் பிரகாரம், வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட | வருமானத்தை அங்கீகரிப்பதற்கான கொள்கையை விபரமாகவும் | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கைகளிலிருந்து ஈட்டப்பட்ட வருமானங்களினை அங்கீகரிப்பதற்கான கொள்கைகள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தின் கட்சியொன்றாக இருந்த கூட்டு முயற்சிகள் மற்றும் மருந்துப் பொருள் விநியோகத்தர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளிலிருந்து ஈட்டப்பட்ட வருமானத்தை அங்கீகரிப்பதற்கான கொள்கைகள் போதுமான அளவு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | போதியளவாகவும் அடுத்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களை பயன்படுத்துவதன் உரிமை மற்றும் குத்தகை பொறுப்பு என்பன குத்தகையுறுனரின் (lessee) தொடக்க திகதியில் அங்கீகரிக்கப்பட வேண்டும். மேலும், குறிப்பிட்ட நியமத்தின் 26 ஆம் பந்தியின் பிரகாரம், அந்த திகதியில் செலுத்தப்படாத குத்தகை கொடுப்பனவுகளின் குத்தகை பொறுப்பினை நடைமுறை பெறுமதியில் குத்தகையுறுனர் மதிப்பிடலாம். மேலும், அந்த நியமத்தின் 47(அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம், சொத்துக்களை பயன்படுத்துவதின் உரிமையானது நிதி நிலைமை கூற்றில் முன்வைக்கப்படல் வேண்டும் அல்லது குத்தகையுறுனரின் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தனால் பயன்படுத்தப்பட்டு வரும் ரூபா 4.92 மில்லியனான குத்தகை நிலத்தினை வெளிப்படுத்துவதற்கு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லா சொத்துக்களின் இழிவுப் பெறுமதி, மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன வருடாந்தம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், பயன்பாட்டில் உள்ள முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 294.82 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பிலான மதிப்பீட்டு வழுவினை திருத்துவதற்கு இலங்கை கணக்கீட்டு | அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் சொத்துக்களின் புதிய மதிப்பீட்டு பெறுமதிகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

நியமம் 8 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டில் இடம்பெற்ற கணக்கீட்டு வழுவொன்றினை திருத்தம் செய்வதற்காக ரூபா 150,397 தொகையொன்று உதிரிப்பாகங்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு இலாப நட்டக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்குப் பதிலாக அதே கணக்கீட்டு திருத்தமொன்று ரூபா 2.95 மில்லியனுக்கு செய்யப்பட்டிருந்தது. | தொடர்புடைய விடயத்தின் சரியான பெறுமதியை மதிப்பிட்டதன் பின்னர் அடுத்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அந்த வழுக்களை நிவர்த்தி செய்ததன் பின்னரே நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 1.28 மில்லியன் தொகையான மூலதன தன்மையான செலவினை வருமான செலவாக கருத்திற் கொண்டு இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேற்கூறியவாறு |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களில் உள்ளடக்கப்பட்டிரந்த இருப்புக்கள் ரூபா 3.34 மில்லியன் தொகையொன்று இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. | தரக்கட்டுப்பாட்டு பிரிவு, கணக்காய்வுக் குழு மற்றும் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேற்கூறியவாறு |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தொகை | தொடர்புடைய பதிவேடுகளின் பிரகாரம் தொகை | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| கூட்டுத் தாபனத்தால் உற்பத்தி செய்யப் பட்டிருந்த 13 வகைகளான மருந்துப் பொருட்களின் விற்பனைக் கிரயம் | 34.66 | 35.07 | 0.41 | கணக்குகளை மூடும் சந்தர்ப்பத்தில் பூரணமாக நாளதுவரையாக்கல் செய்யப்படாத வேலைக்கான கட்டளைகள் நியம கிரயத்திற்கு நாளதுவரையாக்கல் செய்யப்படுவதுடன் வேறுபாடுகள் நாட்குறிப்புக்களினூடாக சமப்படுத்தப்படும். | வேறுபாடுகளுக்கான காரணங்கள் அடையாளம் காணப்படுவதுடன் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | | |
| விற்பனை கிரயம் | 10.44 | சரியான வேலை கட்டளைகள் மற்றும் நாட்குறிப்பு பதிவுகளுடன் தொடர்புடைய துணைப் பதிவுகள் | கணனி முறைமையில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் பகுப்பாய்வின் துல்லியத் தன்மையினை உறுதிப் படுத்துவதற்காக கைமுறையாக சரிபார்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | விற்பனை கிரய தொகையினை உறுதிப் படுத்துவதற்கான சரியான வேலை கட்டளைகளை களும் நாட்குறுப்பு பதிவுகளுடன் தொடர்புடைய துணைப் பதிவுகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்தவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் பிரிவு 6(2)(அ) | ஊழியர் சேவையின் பூர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு வருடங்களுக்கும் அரைமாத சம்பளத்தின் அடிப்படையில் பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்ற போதிலும், ஒவ்வொரு ஊழியரின் முழுமாத சம்பளத்தின் அடிப்படையில் பணிக்கொடை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் விளைவாக, மீளாய்வாண்டின் போது ஓய்வு பெற்ற 5 உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவுகளாக ரூபா 3.85 மில்லியன் தொகையொன்று அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் பணிக்கொடை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்களின் நிதிப்பிரமாணங்கள் 102, 103, 104 மற்றும் 105 | மீளாய்வாண்டின் போது 178 கிலோ கிராம் தரக்குறைவான மூலப்பொருட்கள் மற்றும் 448 கிலோகிராம் குறைவேலை மருந்துப் பொருட்களிலிருந்து ஏற்பட்ட நட்டம் ரூபா 781,553 ஆக இருந்த போதிலும், பொறுப்புடைய தரப்பினர்களை அடையாளம் காண்பதற்கு முறையான புலனாய்வொன்றினை மேற்கொள்ளுதல், நட்டத்தினை அறவீடு செய்தல், முறையாக அகற்றுதல், மற்றும் இருப்புக்களை புத்தகங்களில் இருந்து பதிவழிப்புச் செய்தல் போன்வற்றிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சந்தை பெறுமதியொன்றை கொண்டிருக்காத இருப்புக்கள் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2009 நவம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட 438 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | ரூபா 5.89 மில்லியன் கிரயத்திலான பயன்படுத்த முடியாத மூலப்பொருட்கள், ரூபா 6.03 மில்லியன் கிரயத்திலான குறைவேலை இருப்புக்கள் மற்றும் புத்தகப் பெறுமதி பூச்சியத்தைக் கொண்ட ரூபா 54.10 மில்லியன் கிரயத்திலான நிலையான சொத்துக்களின் 309 அலகுகள் என்பவற்றை அகற்றல் செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றப்படாத மூலப்பொருட்கள் முறையாக அகற்றல் செய்யப்படவுள்ளன. குறை வேலை இருப்புக்களை அழிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் கணக்காய்வு குழுவுக்கு அறிக்கை யிடப்பட்டு பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத் திற்காக சமர்ப்பிக்கப்படும். புத்தகப் பெறுமதி பூச்சியத்தைக் கொண்ட நிலையான சொத்துக்களை அகற்றல் செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 42.34 மில்லியன் மொத்த கிரயத்திலான கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவே டொன்றினை பேணுவதற்கு அடுத்த ஆண்டு முதல் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதியிடப்பட்ட PED-12 ஆம் இலக்க பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | வருடாந்தம் 04 கணக்காய்வு குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக ஆகக் குறைந்தது ஒரு கூட்டமாவது நடத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக பொது திறைசேரியினை பிரதிநிதித்துவப் படுத்தும் பணிப்பாளரொருவர் நியமனம் செய்யப்படவில்லை. திறைசேரியினை பிரதிநிதித்துவப் படுத்துபவர் கணக்காய்வு குழுவின் தலைவராக நியமிக்கப்படுகிறார். கணக்காய்வு குழுவினை நியமிக்க முடியவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஊ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதியிடப்பட்ட 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் | உத்தியோகத்தர் ஒருவருக்கான இடர்காப்பு கடனின் மொத்த தொகை ரூபா 250,000 ஆக மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட எல்லையினை விஞ்சியதாக 45 | பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கு அமைவாகவும் கூட்டுத்தாபனத்தின் உள்ளார்ந்த விதிமுறைகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | கோவையின் அத்தியாயம் xxiv இன் பிரிவு 10 | உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3.42 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | | உள்ளடக்கியதான தாபன விதிக் கோவையொன்றை தயாரித்து திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் வரை பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் கொடுப்பனவுகள் செய்யப்படல் வேண்டும். |
| (எ) | 2009 மார்ச் 09 ஆந் திகதியிடப்பட்டு சுகாதாரம் போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட DMS/E4/10/4/090/2 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் 02-01 ஆம் இலக்க பந்தி | (i) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுத்தர மற்றும் நிறைவேற்று தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு தூரத்தினை கருத்தில் கொண்டு போக்குவரத்து படிகள் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், தூரத்தினை கருத்தில் கொள்ளாமல் 2009 ஆம் ஆண்டு முதல் முறையே ரூபா 4,700 மற்றும் ரூபா 3,000 போக்குவரத்து படியொன்று மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம், இந்த மாதாந்த படியானது மீளாய்வாண்டு முதல் ரூபா 8,000 மற்றும் ரூபா 6,000 ஆக அதிகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட போக்குவரத்துப் படிகள் மற்றும் உற்பத்தி ஊக்குவிப்பு மடிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றைக் கோரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது மற்றும் அதற்கு பதிலொன்றாக (Reply) பரிந்துரைகளுடனான ஊக்குவிப்பு கொடுப்பனவு திட்டமொன்றினை தயாரித்து சமர்ப்பிக்கவும் என்று அறிவிக்கப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னரே தொடர்புடைய சந்தர்ப்பங்களில் இவ்வாறான படிகள் செலுத்தப்படல் வேண்டும். மற்றும் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொடுப்பனவு களுக்கான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | | (ii) உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த உற்பத்தி ஊக்குவிப்பு படியாக ரூபா 4,000 தொகையொன்று செலுத்தப்பட முடியும். இருந்த போதிலும், அந்த தேவைப்பாட்டிற்கு முரணாக 2011 யூலை 01 முதல் மாதமொன்றிற்கு அதிகபட்சமாக ரூபா 12,000 உற்பத்தி ஊக்குவிப்பு | - மேற்கூறியவாறு - | - மேற்கூறியவாறு - |

கொடுப்பனவுகள் மொத்த உத்தியோகத்தர்களுக்கும் செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது அதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 21.49 மில்லியன் தொகையொன்றினை உள்ளடக்கிய ரூபா 102.23 மில்லியன் மொத்த தொகையொன்று 2011 முதல் 2019 திசெம்பர் 31 வரையிலும் குறிப்பிட்ட எல்லையை விஞ்சியதாக உற்பத்தி ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தில் கிட்டத்தட்ட 2000 மில்லியன் அலகுகளைக் கொண்ட 45 வகையான மருந்துப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற போதிலும், கூட்டுத்தாபனத்தில் கிரயக் கட்டுப்பாட்டு அலகொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை மற்றும் கிரயக் கணக்காளர் பதவியொன்று கூட அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட மறறும் கூட்டு முயற்சிகளின் உடன்படிக்கைகளின் பிரகாரம் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உற்பத்தி பொருட்கள் தொடர்பான கிரயத்தினை கட்டுப்படுத்த முடிந்திருக்கவில்லை. | கிரயக் கணக்காளர் பதவியொன்று இல்லாதிருந்த போதிலும் நிறைவேற்று பதவிகளை வகித்த உத்தியோகத்தர்களால் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளுக்கான கிரயம் பரிசீலனை செய்யப்படுகின்றது. இது தொடர்பில் உத்தியோகத்தர் ஒருவரை எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி பொருட்களுடன் தொடர்புபட்ட செயன்முறைகள் மற்றும் கிரயக் கட்டுப்பாட்டு என்பவற்றிற்கான பொருத்தமான பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது 1.91 மில்லியன் கிரயத்தில் 200 கிலோகிராம் Clopidogrel | இந்த மருந்தின் ஆராய்ச்சிக் கட்டத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப | கூட்டுத்தாபனத்திற்கு அதிக நன்மையுடனும் |

| | | | |
|---|---|---|---|
| | Bisulphate கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட மூலப்பொருட்களை பயன்படுத்தி 75mg Clopidogrel Bisulphate குளிசையினை உற்பத்தி செய்வதற்கு தேவையான உற்பத்திக்கான உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ் என்பன தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடமிருந்து 2020 யூன் 10 வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, ரூபா 75.56 மில்லியன் தொகையினை செலவு செய்து மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளையிடப்பட்ட குறிப்பிட்ட மருந்தின் 38 மில்லியன் குளிசைகள் கூட்டு முயற்சிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், குறிப்பிட்ட மருந்து தொடர்பிலான கூட்டுத்தாபனத்தின் நியம உற்பத்தி கிரயம் ரூபா 66.72 மில்லியன் ஆகும். அதற்கிணங்க, கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யாமல் கூட்டு முயற்சிகளிடமிருந்து குறிப்பிட்ட மருந்து கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக ரூபா 8.84 மில்லியன் மேலதிக கிரயமொன்று கூட்டுத்தாபனத்தால் செய்ய வேண்டியிருந்தது. | கோளாறுகள் காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகளை எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு முடியவில்லை. இந்த மருந்து அந்த நேரத்தில் பதிவு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டது மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் 200 கிலோகிராம்களை பயன்படுத்தி முதற்கட்ட வணிக மட்ட ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | மருத்துவ வழங்கல் பிரிவிற்கு குறைந்த கிரயத்திலும் வழங்கல் செய்ய முடியுமான சந்தர்ப்பமொன்றின் கீழான பொருட்களை அடையாளம் காண்பதற்கு கிரய நன்மை பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் எந்த கொள்வனவு அல்லது உற்பத்தி கூட்டுத் தாபனத்திற்கும் பொதுவாக தேசிய பொருளாதாரத்திற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது என்பதை தீர்மானிப்பதற்கு பகுப்பாய்வு மதிப்பீடொன்று செய்யப்பட வேண்டியதுடன் உற்பத்தி கலவையும் தீர்மானிக்கப்படல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க உற்பத்தியானது வடிவமைக்கப்படல் வேண்டும். |
| (இ) | மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை பொருட்களை உற்பத்தி செய்ததன் பின்னர் பொதி செய்கின்ற போது, கூட்டுத்தாபனத்தின் வியாபாரப் பெயர், மற்றம் அரச சின்னம் என்பவற்றை உள்ளடக்கிய ஒவ்வொரு பொருட்களுக்குமான விபரச் சிட்டைகள் ஏனைய வெளி நிறுவனங்களினால் அச்சடிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இது தொடர்பில் முறையான மேற்பார்வை அல்லது | கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறான புலனாய்வுகள் இதுவரையிலும் செய்யப்படவில்லை. மற்றும் இனிமேல் அது பரிசோதிக்கப்படும். அச்சு செய்பவர்களுடன் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கைகளில் ‘‘மூன்றாந் தரப்பினருக்கு எந்த வகையிலும் விபரச்சிட்டைகளை வழங்குவது தண்டணைக்குரிய | கூட்டுத்தாபனத்தின் வியாபாரப் பெயரையும் நன்மதிப்பினையும் சேதமாக்கும் வகையில் குறைந்த தரத்திலான மருந்துகளும் அறுவை சிகிச்சை பொருட்களும் சந்தையில் நுழைவதற்கான சாத்தியமான அனுகுதல்களை |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுப்பாடு என்பன கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக கூட்டுத்தாபனத்தின் வியாபாரப் பெயரையும் நன்மதிப்பினையும் சேதமாக்கும் வகையில் குறைந்த தரத்திலான மருந்துகளும் அறுவை சிகிச்சை பொருட்களும் சந்தையில் நுழைய கூடியதாக இருந்தது. இவ்வாறான அணுகுதல்களை மூடும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குற்றமாகும்'' என்ற விதிமுறையினை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மூடுவதற்கு முறையான புலனாய்வும் கட்டுப்பாடும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்திற்கு அதிக நன்மையுடனும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு குறைந்த கிரயத்திலும் வழங்கல் செய்ய முடியுமான முடியுமான பொருட்களையும், கிரய நன்மை பகுப்பாய்வினை மேற்கொண்டதன் பின்னரான உற்பத்தி கலவையினையும் தீர்மானிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப் பெற்ற மொத்த கட்டளைகளின் எண்ணிக்கை 2045.80 மில்லியன் அலகுகளாகும். அவற்றில் 456.59 மில்லியன் அலகுகளை ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கல் செய்ய முடியவில்லை. மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் அதிகபட்ச ஆற்றலுக்கு கட்டளைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன மற்றும் மீதமுள்ளவை கூட்டு முயற்சிகளினூடாக உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன. ஆகவே, பெரிய தொகை பணத்தினை அரசுக்கு சேமிக்க முடியுமாயிருந்தது. | கூட்டுத்தாபனத்திற்கு அதிக நன்மையுடனும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு குறைந்த கிரயத்திலும் வழங்கல் செய்ய முடியுமான பொருட்கள் மற்றும் உற்பத்தி கலவை என்பன கிரய நன்மை பகுப்பாய்வினை மேற்கொண்டதன் பின்னர் தீர்மானிக்கப்படல் வேண்டும். |
| (உ) | பொது பரிசோதனை ஆய்வு கூடமொன்றினையும் பயிற்சிப் பாடசாலை ஒன்றினையும் நிறுவுவதற்கு கொள்வனவு செய்யப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்ட கட்டிடம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் காணி மற்றும் குறிப்பிட்ட கட்டிடத்தினை கொள்வனவு செய்வதற்கும் கட்டிடத்தை புனரமைப்பு செய்வதற்கும் ரூபா 131.39 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் கட்டிடமானது புனரமைப்பு செய்யப்பட்டதன் பின்னர் 2019 ஆகஸ்ட் 18 அன்று கூட்டுத்தாபனத்தால் கையேற்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வு திகதி 2020 மே 20 வரையிலும் எந்தவொரு தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் கட்டிடம் உபயோகமில்லாமல் மூடப்பட்டு காணப்பட்டது. மேலும், இந்த கட்டிடத்திற்காக உள்ளூராட்சி அரச நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய இணங்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கட்டிடத்திற்காக இணங்கச் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இணங்கச் சான்றிதழை பெற்றுக் கொண்டதன் பின்னர் குறித்த திட்டமொன்றிற்கு அமைவாக உச்ச அளவில் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | கட்டிடத்தினை புனரமைத்ததன் பின்னர் ஆய்வுகூடத்தினை அல்லது பயிற்சிப் பாடசாலையினை நிறுவுவதற்கு தேவையான ஏனைய தேவைப்பாடுகளுக்கான தயாரிப்பு அல்லது முன் திட்டம் என்பவற்றை கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது என்பதனை அவதானிக்க முடியவில்லை. | ஆய்வுகூடத்தினையும் பயிற்சிப் பாடசாலையினையும் அவசியமான உத்தியோகத்தர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவிடமிருந்து பதிவு செய்வதற்கான அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, கட்டிடத்தினை பயன்படுத்தக்கூடிய வேறு முறைகள் பற்றிய அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கட்டிடத்தினை கொள்வனவு | குறிப்பிட்ட திட்டமொன்றின் பிரகாரம் உச்ச அளவில் கட்டிடத்தினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யகூடாது என்பது தனிப்பட்ட கருத்தாக இருக்கிறது. எனினும், கட்டிடத்தை வினைத்திறனாக பயன்படுத்த முடியுமா என்பதை பரிசீலனை செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஏனென்றால் தற்போது கட்டிடமானது கூட்டுத்தாபனத்தின் சொத்தொன்றாக இருக்கிறது மற்றும் குழுவினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது ரூபா 88.42 மில்லியன் செலவு செய்து Cephalexin ஆலை (plant) புனரமைக்கப்பட்டிருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 09 அன்று அது ஒப்பந்தக்காரரினால் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்ட USP 250mg – Cephalexin capsules களுக்கான சிறந்த உற்பத்தி நடைமுறைக்கான சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபையின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதன் விளைவாக 2020 யூலை 16 வரையிலும் கூட உற்பத்திகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. | புனரமைக்கப்பட்ட கட்டிடம் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், உற்பத்திக்கு அவசியமான இயந்திரம் நிறுவப்படவில்லை. எனவே சிறந்த உற்பத்தி நடைமுறைக்கான சான்றிதழுக்காக விண்ணப்பிக்க முடியாதிருந்தது. | புனரமைப்பதற்காக ஏற்பட்ட கிரயத்திற்கான உச்ச நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கு குறித்த திட்டமொன்றின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (எ) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 5.12 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த Phenoxymethyl penicillin Potassium BP2015 மூலப் பொருட்களில் 1000 கிலோகிராம் இருப்பானது | குறிப்பிட்ட மூலப்பொருள் தரத்தில் தோல்வியடைந்ததன் பின்னர் ரூபா 2.5 மில்லியன் தொகையொன்று பிடி பணத்திலிருந்து ஈடுசெய்யப்பட்டது. | தாமதமின்றி உரிய தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரித்தானிய மருந்தகவியல் (BP) நியமத்தினை பின்பற்றாமையினால் தரத்தில் தோல்வியடைந்திருந்தது. தரத் தோல்வியுற்ற இருப்புப் பெறுமதியில் வழங்குனரிடம் இருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய 1.67 மில்லியன் தொகையொன்று இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. | மீதமுள்ள பணத்தினை செலுத்துவதற்கு உள்நாட்டு முகவர் உடன்பட்டார் மற்றும் இது தொடர்பில் பெறுகை பிரிவினால் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |

## 2.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி வினைத்திறன் மற்றும் விளைதிறன் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) கூட்டுத்தாபனத்தின் மாதாந்த உற்பத்தி மற்றும் பொதியிடல் திட்டத்தின் பிரகாரம், எதிர்பார்க்கப்பட்ட 45 உற்பத்தியில் 25 மருந்துகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யமுடியாதிருந்தது. | தொழிற்சாலையின் காற்றில் தேவையான விவரக் குறிப்புக்கள் காணப்படாமை, உற்பத்தி செய்தல் மற்றும் பொதிசெய்தலுக்கான ஊழியர்களின் பற்றாக்குறை, உற்பத்தி செய்தலில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகள், விலைமனு நடைமுறையில் காலத்திற்கு காலம் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக மூலப் பொருட்கள் மாற்றப்படுவதனால் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகள், மூலப்பொருட்கள் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை போன்ற இவ்வாறான அதிகமான காரணங்களின் காரணமாக வருடாந்தம் உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட குறித்த சில மருந்து வகைகளினை உரிய அளவில் உற்பத்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | உற்பத்தி செயன்முறையில் உச்ச வினைத்திறன் மற்றும் விளைதிறனை அடையக்கூடிய வகையில் உற்பத்தி செய்தல் மற்றும் பொதியிடலுக்கான யதார்த்தமான திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் போது 38 மருந்து வகைகளில் இருபது வகைகள் கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கல் செய்யப்பட்டிருந்தன. மருத்துவ | ஒட்டுமொத்த தேவைப்பாட்டினையும் வழங்கல் செய்ய முடியாதிருந்தது. ஏனென்றால் உற்பத்திக்கான ஊழியர்களின் பற்றாக்குறையும் தொழிற்சாலையின் காற்றில் | மருத்துவ வழங்கல் பிரிவின் கட்டளைகளை உச்ச ஆற்றலைக் கொண்டு பூர்த்தி செய்வதன் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கல் பிரிவினால் கட்டளையிடப்பட்டிருந்த ஒட்டுமொத்த வருடாந்த தேவைப்பாடுகளில் 80 சதவீதத்தினை விஞ்சுவதற்கு தவறியிருந்தது. மேலும், மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளையிடப்பட்டிருந்த 13 ஏனைய மருந்து வகைகளின் ஒட்டுமொத்த வருடாந்த தேவைப்பாடுகளில் 50 சதவீதத்தினை கூட வழங்கல் செய்வதற்கு தவறியிருந்தது. | உரிய விவரக் குறிப்புக்கள் காணப்படாமை காரணமாக உற்பத்தியினை நிறுத்த வேண்டியிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவின் கட்டளைகளுக்காக உற்பத்தி பிரிவினால் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து இருப்புக்களும் சந்தைப்படுத்தல் பிரிவிடம் கையளிக்கப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கல் செய்யப்படுகின்றன. | கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கு பாதுகாக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட Tolbutamide BP 500mg குளிசைகள் மீளாய்வாண்டின் போது உற்பத்தி செய்யப்படாமை காரணமாக 2 மில்லியன் அலகுகளைக் கொண்ட மருத்துவ வழங்கல் பிரிவின் வருடாந்த தேவைப்பாட்டினை கேள்வியினை வழங்கல் செய்ய முடியாதிருந்தது. | குறிப்பிட்ட மருந்தின் 2 மில்லியன் அலகுகளைக் கொண்ட தொகை 2018 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டதுடன் 2019 இன் தொடக்கத்தில் பொதியிடல் செய்யப்பட்டது. எவ்வாறாயினும், தற்போது குறிப்பிட்ட மருந்தின் கொள்வனவு மருத்துவ வழங்கல் பிரிவினால் நிறுத்தப்பட்டுள்ளது. | - மேற்கூறியவாறு - |
| (iv) | மீளாய்வாண்டின் போது மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளையிடப்பட்ட மருந்து வகைகளின் இருப்பில், தொழிற்சாலையின் காற்றில் உரிய விபரக் குறிப்புக்கள் காணப்படாமை, உற்பத்தி செய்தல் மற்றும் பொதி செய்தலுக்கான ஊழியர் பற்றாக்குறை, உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருட்களின் பற்றாக்குறையும் வழங்கலை பெற்றுக்கொள்வதில் காலதாமதம் மற்றும் தேவையான பொதிகளின் பற்றாக்குறை போன்ற காரணங்கள் காரணமாக ரூபா 528.86 மில்லியன் விற்பனை விலைக்கான 408.23 மில்லியன் அலகுகளைக் கொண்ட 18 மருந்து வகைகளை 2020 பெப்ரவரி 12 வரையிலும் கூட வழங்கல் செய்ய முடியாதிருந்தது. | அவதானிப்புக்கள் சரியானவை மற்றும் தற்போது 2020 ஆம் ஆண்டில் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு மருந்து வகைகள் உரிய நேரத்தில் வழங்கல் செய்யப்பட்டன. | மருத்துவ வழங்கல் பிரிவின் கட்டளைகளை உச்ச ஆற்றலைக் கொண்டு பூர்த்தி செய்வதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கு பாதுகாக்கப்படல் வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் போது மாத்திரைகளை சிறிய பகுதிகளாக உடைக்கும் தன்மையினை கொண்ட மருந்துகள் உற்பத்தி | உற்பத்தி செயன்முறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகள் காரணமாக மருந்து வகைகளை மீள் உற்பத்தி செய்ய | மருந்து வகைகளின் தரம் குறைவடைந்து செல்லுதல் மற்றும் உற்பத்தி பிரச்சினைகளை |

| | | |
|---|---|---|
| அதிகரித்தமை, மாத்திரைகளின் நிறையில் வேறுபாடுகள், உடைக்கும் மாத்திரைகளின் கஷ்டங்கள் மற்றும் மோசமான தோற்றம் காரணமாக உற்பத்தியை பாதியில் நிறுத்தி மீண்டும் உற்பத்தி செய்தமையின் விளைவாக ரூபா 21.64 மில்லியன் மேலதிக கிரயமொன்றை செய்ய வேண்டியிருந்தது. ஒவ்வொரு ஆண்டிலும் உற்பத்தி செயன்முறையில் ஏற்பட்ட இந்த சாதகமற்ற நிலைமைகளை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டியிருந்தது. மூலப்பொருட்களின் தரத்தில் அடிக்கடி காணப்பட்ட வேறுபாடுகள் இந்த நிலைமைக்கு முக்கிய காரணமாகும். கூட்டுத்தாபனம் இவ்வாறான பிரச்சினைகளுக்கு அடிக்கடி முகங்கொடுக்க வேண்டியதுடன் அதன் மீது மேலதிக கிரயமொன்றையும் செய்ய வேண்டியுள்ளது. | குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (vi) மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி கட்டிடத்தில் இருந்த 4 மருந்து வகைகளுக்காக ரூபா 2.50 மில்லியன் கிரயத்தில் 224 கிலோ கிராம் மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் குறித்த மருந்து வகைகளை 2020 யூலை 13 வரை வணிக மட்டத்தில் உற்பத்தி செய்வதற்கு தவறியது. ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட, பூர்த்தி செய்யப்பட்ட திகதிகள், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்தல் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆரம்பிக்க முடியாதிருந்த உற்பத்திக்கான காரணங்கள் போன்றவற்றுடன் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த ஆண்டில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 1.70 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட Flucloxaullin Sodium BP மூலப்பொருட்களின் 200 கிலோகிராம் இருப்பொன்று பயன்படுத்தப்படாமல் 2020 யூலை 16 வரையிலும் மருந்து மூலப்பொருள் களஞ்சியசாலையில் காணப்பட்டது. | இரண்டு மருந்துப் பொருள் வகைகள் பதிவிற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன மற்றும் பதிவு தேவைப்படுகின்ற மற்றைய இரண்டு வகைகளும் இன்றும் ஆராய்ச்சிக் கட்டிடத்திலேயே இருந்தன. Flucloxaullin Sodium BP இன் பதிவிற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | சந்தைப்படுத்தல் திட்டம் மற்றும் உற்பத்தி திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மூலப் பொருட்களுக்கான கொள்வனவு திட்டத்தின் பிரகாரம் மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (vii) தரக்கட்டுப்பாட்டு பிரிவின் அங்கீகாரத்திற்காக உற்பத்தி | வழக்கமாக உற்பத்தி செயன்முறை முடிவடைந்ததன் | உற்பத்தி செயன்முறையினை |

| | | | |
|---|---|---|---|
| | செயன்முறை பூர்த்தியடைந்திருந்த 5,466 கிலோகிராம் முடிவடைந்த மருந்துப் பொருட்களும் மற்றும் பொதி செய்தலுக்காக 2,355 கிலோகிராம் முடிவடைந்த மருந்துப் பொருட்களும் முறையே தரக்கட்டுப்பாட்டு பிரிவினதும் பொதியிடல் பிரிவினதும் திறன் பற்றாக்குறை காரணமாக தொழிற்சாலையில் குவிக்கப்பட்டிருந்தன என்று 2019 ஒக்தோபர் 23 அன்று மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு உறுதிப்படுத்தலில் அவதானிக்கப்பட்டது. | பின்னர் முடிவடைந்த மருந்துப் பொருட்களை சரிபார்ப்பதற்காக தரக்கட்டுப்பாட்டு பிரிவுக்கு 2-3 நாட்கள் எடுக்கும் மற்றும் சந்தர்ப்பங்களுக்காக அது மீள சரிபார்க்கப்படல் வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளும் தரக்கட்டுப்பாட்டு பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் மற்றும் ஒரு தடவை பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதும் அவ்வாறான மருந்துப் பொருட்கள் தரக்கட்டுப்பாட்டு பிரிவினால் அங்கீகரிக்கப்படுகின்றன. | உச்ச ஆற்றல் மற்றும் வினைத்திறனில் பூர்த்தி செய்வதற்கு தரக்கட்டுப்பாட்டு பிரிவினதும் பொதி செய்தல் பிரிவினதும் ஆற்றல் மேம்படுத்தப்படல் வேண்டும். |
| (viii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளின் தரத்திற்கு முதன்மையாக பொறுப்பாக காணப்படுகின்ற தரக்கட்டுப்பாட்டு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 30 ஆக இருந்தது. எவ்வாறாயினும், உதவிப் பொது முகாமையாளர் (தரக் கட்டுப்பாட்டு) பதவியின் வெற்றிடங்களையும் தரக்கட்டுப்பாட்டு உதவியாளர் பதவியின் 6 வெற்றிடங்களினையும் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 செப்தெம்பர் 08 அன்று பத்திரிகை அறிவித்தல்களுடாக அந்த வெற்றிடங்களினை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், அது பொது தேர்தல் காரணமாக பிற்போடப்பட வேண்டியிருந்தது மற்றும் பொதுத் தேர்தலின் பின்னர் குறிப்பிட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ix) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மருந்துப் பொருள் நிரப்பும் உதவியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 29 ஆக இருந்தது மற்றும் மேலே குறிப்பிட்ட பதவிகளில் 2 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது. | 2020 பெப்ரவரி 20 அன்று பத்திரிகை அறிவித்தல்களுடாக அந்த 2 வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன மற்றும் பொது தேர்தல் காரணமாக ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தப்பட வேண்டியிருந்தன. | - மேற்கூறியவாறு - |
| (ஆ) | 41 மருந்து வகைகளினை உள்ளடக்கிய ரூபா 353.95 மில்லியன் விற்பனை இலக்கொன்றை மீளாய்வாண்டின் போது அடைந்து கொள்ள முடியாது காணப்பட்டதுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்காகத் தவறிய சதவீதத்தின் வீச்செல்லை 06 தொடக்கம் 92 சதவீதமொன்றாகக் காணப்பட்டது. | மருத்துவ வழங்கல் பிரிவிற்குரிய கட்டளைகளுக்கு முன்னுரிமையை வழங்கி உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. மூலப்பொருட்களின் வளஅருமை மற்றும் தொழில்நுட்ப பிரச்சினைகள் காரணமாக விற்பனை இலக்குகளினை அடைந்து கொள்ள முடியாது | வருடாந்த விற்பனைத் திட்டத்தின் இலக்குகளினை அடைந்து கொள்வதற்கு அதிஉத்தம பிராயத்தனம் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காணப்பட்டதுடன் எதிர்காலத்தில் தொடர்ச்சியாக திறந்த சந்தைக்கு கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளினை விநியோகிக்கும் பொருட்டு விற்பனை வலையமைப்பினை விரிவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | |

## 3. கூட்டு முயற்சிகளின் முகாமைத்துவம்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு ரீதியில் மருந்து உற்பத்தி செயற்பாட்டினை விரிவாக்கஞ் செய்யும் பொருட்டு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் பொருத்தமான தனியார் துறை முதலீட்டாளர்களிடையே கூட்டு முயற்சிகளினை திறப்பதற்கான முன்மொழிவின் கீழ் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மருந்துகளின் விநியோகத்திற்காக 17 பொருத்தமான முதலீட்டாளர்களுடன் கூட்டுத்தாபனம் உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக் கொண்டது. 2019 ஆம் ஆண்டின் போது அவ்வாறான கூட்டு முயற்சிகளுடன் கொடுக்கல் வாங்கல்களினை மேற்கொள்கையில் கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்பட்டிருந்த வழிமுறைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) தொடர்புடைய மருந்துகளுக்கான செயல்முறையுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டுமென அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கூட்டு முயற்சிகளினை ஸ்தாபிப்பதற்கான உத்தியோகபூர்வ குழுவால் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பரிந்துரைக்கு முரணாக, அறுவை சிகிச்சை நுகரத்தக்கவைகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்திற்காக உள்ளூர் உற்பத்தியாளர் மற்றும் இடைநடுவர் நிறுவகமொன்றுடன் முற்தரப்பு உடன்படிக்கையொன்றை கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஏற்படுத்தியிருந்தார். | அந்த நிறுவனங்களுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த முற்தரப்பு உடன்படிக்கை 2020 மே 30 இல் இரத்துச் செய்யப்பட்டது. தற்போது கூட்டு முயற்சிகளுடன் மருந்தாக்கல் நடைமுறைகளுக்காக மாத்திரம் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டிக் காணப்படுகின்றதுடன் கூட்டு முயற்சிகளினை முறையாக முகாமை செய்வதற்கு விரைவில் முறைமையொன்று தயாரிக்கப்படும். | அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரையின் பிரகாரம், கூட்டு முயற்சிகளுக்காக ஒப்பந்தஞ் செய்யப்பட்ட முதலீட்டாளர்களின் தரக் கட்டுப்பாடு, உற்பத்தி செயன்முறையின் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவி என்பன கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படல் வேண்டும் அத்துடன் குறித்த முதலீட்டாளரின் வியாபாரத்தின் 10 சதவீத பங்குகள் இது தொடர்பில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 2,172.65 மில்லியனுக்கான 15 மருந்து வகைகள் மற்றும் ரூபா 42.41 மில்லியனுக்கான அறுவை சிகிச்சை நுகரத்தக்கவைகளின் 05 வகைகள் பங்குகள் வழங்கப்பட்டிருக்காத இரண்டு தனியார் கம்பனிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது மருத்துவ வழங்கல் பிரிவுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. மேலும், போதுமானதொரு தரக்கட்டுப்பாட்டு அல்லது முகாமைத்துவம் குறித்த இரண்டு தனியார் கம்பனிகளுக்காக கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வியாபாரத்தின் 10 சதவீத பங்குகள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட வேண்டுமென முதலீட்டாளர்கள் அறிவுறுத்தப்பட்டள்ளனர் கூட்டு முயற்சிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான தரக் கட்டுப்பாட்டு பரீட்சிப்பு கூட்டுத்தாபனத்தினால் அல்லது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. முகாமைத்துவ உதவி தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தரணிகள் குழுவுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. | அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | கூட்டு முயற்சிகளுக்காக ஒப்பந்தஞ்செய்த முதலீட்டாளரினால் மருந்துகள் உற்பத்தியின் உற்பத்திக் கிரயத்திற்கு 20 சதவீத இலாப எல்லையினை சேர்ப்பதன் மூலம் விற்பனை விலை தீர்மானிக்கப்படல் வேண்டும். அவ்வாறான முதலீட்டாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 11 மருந்து வகைகளின் மொத்த உற்பத்திக் கிரயம் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு விற்பனை செய்யப்பட்டவை ரூபா 614.26 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இலாபமாக ரூபா 84.31 மில்லியனை சேர்த்து ரூபா 698.57 மில்லியன் பெறுமதியினையுடைய விலைப்பட்டியலுக்கு கூட்டுத்தாபனத்திற்கு அது விநியோகிக்கப்பட்டிருந்தது. சேவைக் கட்டணங்களாக குறித்த விலைப்பட்டியல் பெறுமதிக்கு ரூபா 57.87 மில்லியன் தொகையொன்றை கூட்டுத்தாபனம் சேர்ந்திருந்ததுடன் ரூபா 756.44 மில்லியனுக்கு மருந்துவ வழங்கல் பிரிவுக்கு விநியோகித்திருந்தது. குறித்த 11 வகைகளின் மொத்த உற்பத்திக் கிரயத்தில் இலாப எல்லையாக முதலீட்டாளரினால் 13.73 சதவீதம் உழைக்கப்பட்டிருந்ததுடன் சேவைக் கட்டணமாக விலைப்பட்டியல் | எதிர்காலத்தில் தொடர்புடைய இலாப எல்லையினை மிகைத்துக் காணப்படாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இலாப எல்லை மற்றும் தொடர்புடைய விலைகள் தொடர்பில் விசேடமாக விலையிடல் குழுவின் முக்கிய உறுப்பினர்களுடன் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தினால் (நிதி) விசேட புலனாய்வொன்று மேற்கொள்ளப்படுகின்றது. மருந்து வழங்கல் பிரிவின் கணக்காளரினால் கிரய அட்டைகளுக்கு மேலதிகமாக முன்மொழியப்பட்ட விலைகளினை ஒப்பீடு செய்த பின்னர் | அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியின் 8.28 சதவீதம் கூட்டுத்தாபனத்தினால் உழைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, இலாபம் மற்றும் சேவைக் கட்டணமாக மொத்த உற்பத்திக் கிரயத்தில் 23.15 சதவீதத்தினை சேர்ப்பதன் மூலம் விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. | விலைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. | |
| (iv) | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையின் பிரகாரம், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற கம்பனிகளுக்குள் மாத்திரம் கூட்டு முயற்சிகள் ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும், உற்பத்தி இன்றி அறுவை சிகிச்சை உபகரணங்களினை விநியோகிக்கின்ற தனியார் கம்பனியொன்றுடன் மாத்திரம் ஒப்பந்தஞ் செய்யப்பட்டிருந்தது. ரூபா 35.02 மில்லியனுக்கு ஏனைய விநியோகத்தரிடமிருந்து கொள்வனவு செய்த பின்னர் 8 சந்தர்ப்பங்களில் குறித்த முதலீட்டாளரினால் ரூபா 42.41 மில்லியனுக்கு கூட்டுத்தாபனத்திற்கு அறுவை சிகிச்சை நுகரத்தக்கவைகளின் ஐந்து வகைகள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் இடைத்தரகு இலாபமொன்றாக ரூபா 7.39 மில்லியன் மற்றுமொரு தொகை சேர்க்கப்பட்டிருந்தது. மேலும், சேவைக் கட்டணங்களாக ரூபா 2.67 மில்லியன் மற்றுமொரு தொகையினை கூட்டுத்தாபனம் சேர்த்திருந்ததுடன் ரூபா 45.08 மில்லியனுக்கு மருத்துவ வழங்கல் பிரிவுக்கு விநியோகித்திருந்தது. இந்த முதலீட்டாளர் மேற்குறித்தவொரு சந்தர்ப்பத்தில் மற்றுமொரு இடைநடுவர்களினூடாக உண்மையான உற்பத்தியாளர்களிடமிருந்து குறித்த வகைகளினை கொள்வனவு செய்திருந்தார். உண்மையான உற்பத்தியாளரின் உற்பத்திக் கிரயத்திற்காக ஏதேனும் சந்தர்ப்பத்தில் கூட்டுத்தாபனத்தினால் கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br>மீளாய்வாண்டின் போது 8 சந்தர்ப்பங்களில் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு குறித்த இடைநடுவர் முதலீட்டாளரினால் விநியோகிக்கப்பட்ட சத்திரசிகிச்சை நுகரத்தக்கவைகளின் விலைகளினை கருத்திற் கொள்ளும் போது, கூட்டுத்தாபனம் மற்றும் இடைநடுவர் முதலீட்டாளரினால் உண்மையான உற்பத்தியாளரின் விற்பனை விலையின் 56 தொடக்கம் 115 சதவீதம் | அவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் இடம்பெறாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் முற்தரப்பு உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் இப்போதிருந்து அவ்வாறான இடைநடுவர்களிடமிருந்து அவ்வாறான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது. வெளிப்படைத்தன்மை தொடர்பில் எதிர்காலத்தில் இந்த முறைமையினை அறிவதற்கு கூட்டுத்தாபனத்தினால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதுடன் குறித்த குழுவினால் தீவிரமான ஆய்வொன்றை மேற்கொண்ட பின்னர் விலையிடல் குழுவிற்கு அறிவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டு முயற்சிகள் நாட்டிற்கு அதிக இலாபகரமானவையாகக் காணப்படுவதன் காரணமாக நாட்டிற்கு அதிகளவிலான பணத்தொகையொன்றை சேமிப்பதற்கு மற்றும் அதிக எண்ணிக்கையான புதிய தொழில் வாய்ப்புக்களினை உருவாக்குவதற்கான சந்தர்ப்பமொன்று காணப்படுகின்றது. | அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையான வீச்சொன்றில் இலாபம் மற்றும் சேவைக் கட்டணங்கள் சாட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (v) | அறுவை சிகிச்சை உபகரணத்தை உற்பத்தி செய்யாமல் விநியோகத்தினை மாத்திரம் மேற்கொண்டிருந்த தனியார் கம்பனியால் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கிரய அட்டைகள் மேலே (iv) இல் குறிப்பிட்டபடி துல்லியமாக இருக்கவில்லை என்று உறுதி செய்யப்பட்டது மற்றும் அவை முதல் உற்பத்தியாளரின் உண்மை உற்பத்தி கிரயத்தினை உள்ளடக்கி தயாரிக்கப்படவில்லை. அவ்வாறான கிரய அட்டைகளின் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்தவும் மற்றும் சுயாதீனமான தரப்பினரொருவர் மூலம் கிரய அட்டைகளில் உள்ளடக்கப்பட்ட தரவுகளை உறுதிப்படுத்தவும் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புள்ள எந்தவொரு உத்தியோகத்தராலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கடுமையான கவனம் செலுத்திய பின்னர், 2020 ஆம் ஆண்டிலிருந்து கிரய அட்டைகளின் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு ; குறிப்பிட்ட விடயத்திற்கு பொறுப்பேற்க கூடிய உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவொன்றினை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் மற்றும் கிரய அட்டைகளின் துல்லியத்தன்மை சுயாதீனமாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| (vi) | கூட்டுமுயற்சியொன்று கட்டியெழுப்பப் பட்டிருக்கவில்லை ஏனென்றால் கூட்டு முயற்சிக்கு ஒப்பந்தம் செய்த முதலீட்டாளர் இலாபம் ஈட்டியதுடன் அதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனம் சேவைக் கட்டணங்களை ஈட்டியிருந்தது மற்றும் குறைந்த கிரயத்தில் மருந்து வகைகளை வழங்குவதற்கான நோக்கம் எதிர்பார்த்தபடி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மருத்துவ வழங்கல்களுக்காக அரசாங்கத்தினால் செலவு செய்யப்படும் பொது நிதிகளை பல்வேறு இடைநிலை கம்பனிகளின் வருமானத்திற்கு மாற்றுவதற்கான செயன்முறையொன்று குறிப்பிட்ட நடவடிக்கையின் ஊடாக செயல்படுத்தப்பட்டிருந்தது. கூட்டு முயற்சிகளின் பிரதான பங்காளரான கூட்டுத்தாபனத்தால் முறையான மேற்பார்வை, வழிகாட்டல் அல்லது நிருவகித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அனைத்து கூட்டு முயற்சிகளின் கிரய அட்டைகள் பூரண சரிபார்ப்பிற்காக குறிப்பிட்ட குழுவிற்கு குறிப்பிடப்படுவதுடன் அனைத்து குறைபாடுகளையும் குறைத்ததன் பின்னர் விலைகள் அங்கீகாரத்திற்காக குறிப்பிடப்படும். | அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | ஒப்பந்த முதலீட்டாளர் ஒருவரால் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு கொள்வனவு செய்து வழங்கல் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை நுகர்வு பொருட்களின் உண்மையான உற்பத்தியாளரால் சிறந்த உற்பத்தி நடைமுறைக்கான (GMP) சான்றிதழ் மற்றும் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான உரிமம் என்பன தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மற்றுமொரு உண்மையான வழங்குனரால் 2002 சனவரி 02 அன்று சிறந்த உற்பத்தி நடைமுறையின் சான்றிதழும் 2010 நவம்பர் 20 அன்று உரிமமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன மற்றும் எவ்வாறாயினும், அந்த ஆவணங்கள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடமிருந்து நாளதுவரையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | சிறந்த உற்பத்தி நடைமுறை சான்றிதழை (GMP) பெற்றுக் கொள்வதற்கு உண்மையான உற்பத்தி நிறுவனத்தால் நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருந்த போதிலும் ; தற்போது வரை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA) குறிப்பிட்ட சான்றிதழை அவர்களுக்கு வழங்கவில்லை. மற்றுமொரு உண்மையான உற்பத்தியாளருக்கு வழங்கப்பட்ட சிறந்த உற்பத்தி நடைமுறையின் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் தொடர்கிறது. | கூட்டு முயற்சிகளுக்கு ஒப்பந்தம் செய்த நிறுவனங்களால் சிறந்த உற்பத்தி நடைமுறையின் (GMP) சான்றிதழ் வைத்திருக்கப் படுவது கண்காணிக்கப்படல் வேண்டும். |
| (viii) | மீளாய்வாண்டின் போது கூட்டு முயற்சிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு மருத்தவ வழங்கல் பிரிவுக்கு வழங்கல் செய்யப்பட்ட 2 மருந்துப்பொருள் வகைகளுக்கு தரக்கட்டுப்பாட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை மற்றும் 5 அறுவை சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் தரத்தினை சோதனை செய்வதற்கான வசதிகள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானவை அல்ல. ஆகவே ஒவ்வொரு உற்பத்தி வகைகளின் மாதிரிகள் வழங்குனர்களால் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (ITI) அவர்களாலேயே பரிந்துரைக்கப்பட்டன மற்றும் குறிப்பிட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பரிசோதனை அறிக்கைகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மருந்து வகைகளின் தரம் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க, கூட்டு முயற்சிகளின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கல் செய்யப்பட்ட மருந்து வகைகளுக்கான போதுமான சுயாதீனமான உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் கைத்தொழில் தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தால் (ITI) சோதனை செய்யப்பட்டதன் பின்னர் கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட மாதிரிகளை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கூட்டு முயற்சிகளுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம், மாதிரிகள் எழுமாறாக சோதனை செய்யப்படுகின்றன மற்றும் கூட்டு முயற்சிகளால் ஒவ்வொரு வழங்கல்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பகுப்பாய்வு சான்றிதழானது மிகவும் கவனமாக ஆராயப்படுகின்றது. | கூட்டு முயற்சிகளின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கல் செய்யப்பட்ட மருந்து வகைகளின் தரம் தொடர்பில் சுயாதீனமான உறுதிப் படுத்தலொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ix) | தரக்கட்டுப்பாட்டு மற்றும் மருத்துவ வழங்கல்களுக்கான விதிமுறைகள் தொடர்பிலான கூட்டு முயற்சி உடன்படிக்கையின் பிரிவு 7.1 இன் பிரகாரம், | மருந்துப் பொருட்கள் மற்றும் அறுவை சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு | கூட்டு முயற்சிகளின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கல் |

| | | | |
|---|---|---|---|
| | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கூட்டு முயற்சி உடன்படிக்கைகளின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கல் செய்யப்பட்ட சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி செயன்முறை மற்றும் இரண்டு உண்மையான உற்பத்தி நிறுவனங்கள் தொடர்பிலான உற்பத்திகளின் தரம் தொடர்பில் 2019 நவம்பர் 13 வரையிலும் கூட கூட்டுத்தாபனத்தால் பௌதீக உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதற்கிணங்க, அத்தகைய உற்பத்தி பொருட்களின் உற்பத்தி தரம் அல்லது நியமம் பற்றிய போதுமான சுயாதீனமான உறுதிப்படுத்தலை கொண்டிராமல் கூட்டுத்தாபனத்தின் வியாபார பெயரின் கீழ் இத்தகைய உற்பத்திப் பொருட்கள் மருந்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கல் செய்யப்பட்டிருந்தன. | செயயப்பட்டிருந்த கூட்டு முயற்சிக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் வழங்கப்பட்ட மருந்துப் பொருட்கள் மற்றும் அறுவை சிகிச்சை நுகர்வுப் பொருட்களின் பதிவுச் சான்றிதழ்களும், தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தரப்பரிசோதனை அறிக்கையும் ஆராயப்படுகின்றன மற்றும் கூட்டு முயற்சிகளின் உற்பத்தி செயன்முறையுடன் தொடர்புபட்ட போதுமான பௌதீக உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுவதற்கும் எதிர்காலத்தில் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செய்யப்பட்ட மருந்து வகைகளின் தரம் தொடர்பில் சுயாதீனமான உறுதிப் படுத்தலொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (x) | கூட்டுமுயற்சி உடன்படிக்கையின் பிரிவு 10 இன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது 824.95 மில்லியன் பெறுமதியிலான 10 வகையான மருந்துப் பொருட்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் வழங்கியிருந்த கட்டளைகளுக்கான செயலாற்றல் பிணைமுறிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு தொடர்பில் நிறுவனமொன்றிற்கு செலுத்த வேண்டிய தொகை நிலுவை தொகையொன்று காணப்பட்டதுடன் இதன் காரணமாக வழங்குனர் செயலாற்றல் பிணை முறியினை சமர்ப்பிக்கவில்லை. எவ்வாறாயினும், மருந்து வகைகளின் வழங்களின் தேவைப்பாடு காரணமாக மருந்து வகைகள் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இப்போதிருந்து ஒவ்வொரு வழங்கல்களுக்குமான செயலாற்றல் பிணை முறிகளினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | அரச பெறுகை வழிகாட்டியின் விதி முறைகளுக்கு அமைவாகவும் முயற்சி உடன்படிக்கைகளின் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் பெறுகையானது முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

## 4. ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 118.58 மில்லியன் மொத்த செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2018 ஒக்டோபர் 12 அன்று திறந்து வைக்கப்பட்ட நான்கு மாடி கட்டிடத்தில் வெடிப்புக்கள் பல்வேறு இடங்களில் இருந்தமை, கட்டிடத்தினுள் மழை நீர் கசிவடைதல், கணிய அளவுகளில் (BOQ) குறிப்பிடப்பட்டிருந்த தொகையை விட குறைவான நிர்மாணிப்புக்கள் போன்ற பெரிய குறைபாடுகள் காணப்பட்டன என்று 2020 பெப்ரவரி 12 மற்றும் யூன் 01 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு உறுதிப்படுத்தலில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறான குறைபாடுகளை கருத்தில் கொள்ளாமல் அத்தகைய பொருட்கள் தொடர்பிலான மொத்த தொகைக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2020 யூன் 12 அன்று கூட்டுத்தாபனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் (CECB) அறிக்கையின் பிரகாரம், குறிப்பிட்ட கட்டிடத்தின் நிர்மாணிப்பில் நியம கட்டுமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை மற்றும் இத்தகைய குறைபாடுகள் குறிப்பிட்ட காரணத்தினால் ஏற்பட்டன என்று மேலதிகமாக உறுதிப்படத்தப்பட்டது. | இந்த கட்டிடத்தில் அதிகமான குறைபாடுகள் காணப்படுகின்றன, இது தொடர்பில் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திடமிருந்து (CECB) அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது, குறிப்பிட்ட அறிக்கையிலும் கணக்காய்வு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் புலனாய்வொன்றினை நடத்த வேண்டுமென்று சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்ததன் பின்னர் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) புலனாய்வொன்றிற்காக வந்திருந்தார். அதேநேரம் அவ்வாறான குறைபாடுகளை ஒப்பந்தக்காரர் சரி செய்திருந்தார். கணிய அளவுகளை விட குறைவாக மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புக்களுடன் தொடர்புபட்ட நிபுணர்களினால் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் விலைகளை சரிசெய்வதற்கும் பிடித்து வைத்தல் பணத்திலிருந்து மேலதிக கொடுப்பனவுகளை ஈடுசெய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளரின் தீர்மானத்தினை பொறுத்து நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரச பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் ஒப்பந்த முகாமையானது முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். மற்றும் இந்த நிர்மாணிப்பு தொடர்பில் முறையான புலனாய்வொன்றினை மேற்கொண்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 முதல் 2022 வரையிலான 5 வருட காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டு கூட்டுத்தாபன திட்டம் மற்றும் 2019 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட | | |

செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளின் அடைவுகளின் முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | 2003 யூன் 02 திகதியிடப்பட்ட PED 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டியின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் அடையப்பெற வேண்டிய நடவடிக்கைகளின் செயல்திறனை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை உள்ளடக்கியதாக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட கூட்டுத்தாபன திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த சில நடவடிக்கைகள் தொடர்பிலான முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் குறிப்பாகவும் , பொருண்மையாகவும் மற்றும் அளவிடக்கூடிய வகையிலும் காட்டப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 17 நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றத்தினை குறிப்பாக மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | தொடர்புடைய நடவடிக்கைகளின் தற்போதைய செயல் முன்னேற்றத்தினை எதிர்காலத்தில் விரைவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் மற்றும் எதிர்காலத்தில் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை (KPI) உள்ளடக்கி கூட்டுத்தாபன திட்டம் தயாரிக்கப்படும். | தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டிக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 19 நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது. அதற்கு மேலதிகமாக 11 நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றமும் அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை மற்றும் ஏனைய 6 நடவடிக்கைகளுக்கான நிதிசார் செயல் முன்னேற்றம் வெளிப்படுத்தப்படாமல் பௌதீக செயல் முன்னேற்றம் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, குறிப்பிட்ட 17 நடவடிக்கைகளுக்கான செயல் | தொடர்புடைய நடவடிக்கைகளின் தற்போதைய செயல் முன்னேற்றத்தினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டிக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றத்தினை குறிப்பாக மதிப்பீடு செய்ய முடிந்திருக்கவில்லை. | | |
| (iii) | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டுத்தாபன திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், விற்பனை வலையமைப்பினை விரிவாக்குவதற்கு தேவையான விநியோகஸ்தர்கள் மற்றும் பட்டியல்படுத்தப்பட்ட வணிகர்கள் அடையாளம் காணப்பட வேண்டுமென்ற போதிலும், குறிப்பிட்ட காலப்பகுதியின் போது புதிய வழங்குனர்களையும் பட்டியல்படுத்தப்பட்ட வணிகர்களையும் அடையாளம் காண தவறியது. | கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதற்கான ஜய்கா (JICA) செயற்திட்டத்தின் விளைவாக போதுமான இருப்புக்களின் பற்றாக்குறை காரணமாக புதிய வழங்குனர்களையும் பட்டியல்படுத்தப்பட்ட வணிகர்களையும் அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. 2020 ஆம் ஆண்டிற்கான பதிய வழங்குனர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது மற்றும் எதிர்காலத்தில் விற்பனை வலையமைப்பினை விரிவாக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கூட்டுத்தாபன மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். |
| (iv) | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் அண்டு வரையிலான 5 ஆண்டு காலப்பகுதியின் போது தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் 3.1.3 ஆம் நடவடிக்கையின் பிரகாரம் சந்தை ஆய்வினையும் புலனாய்வினையும் முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனியார் சந்தை கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு போதுமான இருப்புக்கள் தொடர்ச்சியாக கிடைக்கப்பெறாமை காரணமாக விற்பனை தொடர்பான சரியான சந்தை தகவல்களை பெற்றுக் கொள்வது கடினமாக இருந்தது. மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் இது போன்ற தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | - மேற்கூறியவாறு - |